

ஜெனோ மோகன்,
சமூகச் செயல்பாட்டாளர்



கொரோனா காலத்தில் நாடு நகரமெல்லாம் ஊரடங்கு உத்தரவில் யாரும் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று கட்டளையிட்ட காலத்திலும் இவர்கள் மட்டும் ஊரெல்லாம் சுத்தம் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

# உழைப்போர் வாழ்வு...?

இன்று உலகமெங்கும் கொண்டாடப்படுகின்ற அல்லது நினைவுகூரப்படுகின்ற அனைத்து தினங்களுமே வரலாற்றுப் பின்னணிகளை உள்ளடக்கியவை. அதனடிப்படையில் கொண்டாடப்படும் தினங்களுக்குரியவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு வகையில் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அது நீர் உரிமை ஆனாலும் சரி.. பெண்கள் உரிமை ஆனாலும் சரி..

மேதினம், உழைப்பாளர் தினம், தொழிலாளர் தினம் என நாம் எவ்வாறு அழைத்தாலும் அது அடிப்படையில் தொழிலாளர்களின் உரிமையை மையப்படுத்தியதே ஆகும். ஒவ்வொரு நாட்டின் சமூகச் சூழல்கள் வெவ்வேறாக இருந்தாலும் முதலாளி, தொழிலாளி இடையேயான பாகுபாடு மட்டும் ஒரேமாதிரிதான் இருக்கிறது. உலகெங்கும் இனப்பாகுபாடு இருந்தாலும் அதிலும் கூடத் தொழிலாளி, முதலாளி பாகுபாடு இருக்கத்தான் செய்கிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சாதியபாகுபாடு இருப்பதை மறுப்பதற்கில்லை. தன்னுடைய சாதியைச் சார்ந்த தொழிலாளியாக இருந்தாலும் உழைப்புச் சுரண்டல் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. சாதிச்சாயம் என்பது விளிம்பு நிலையில் இருக்கின்ற தொழிலாளர்களுக்குத் தொழில் சுமையைவிடக் கூடுதல் சுமையாகவே இருக்கிறது. அவர்கள் விவசாயிகளாக, விவசாயக் கூலிகளாக, தூய்மைப் பணியாளர்களாக, துணிகளை வெளுக்கும் தொழிலாளர்களாக, காலணித் தொழில் செய்யும் செருப்புத் தைப்பவர்களாகக் கடைநிலையில் இருக்கிறார்கள்.

இதில் தூய்மைப் பணியாளர்கள் நகரங்களின் அச்சாணியாக விளங்குகிறார்கள். ஒருநாள் இவர்கள் பணிசெய்ய மறுத்தால் நகரங்களின் நிலை நாறிப் போய்விடும். ஒட்டுமொத்த சுகாதாரமே இவர்களை நம்பித்தான் இருக்கிறது. நோய் வந்தபிறகு தான் மருத்துவர்கள் தேவையாக இருக்கிறார்கள். ஆனால், நோய் வராமல் தடுக்கின்ற முன்கள மருத்துவர்கள் தூய்மைப் பணியாளர்கள் தான். சாதாரண நாட்களில் மட்டுமல்லாது, கன மழை வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களில் இவர்களது தியாகப் பணி என்பது மகத்தானது. தூய்மைப் பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும், ஒப்பந்தப் பணியாளர்களாகவும், தினக் கூலிகளாகவும் பிரித்தாளப் படுகின்றனர்.

நிரந்தரத் தூய்மைப் பணியாளர்களுக்கு மாநகராட்சியில் பணிபுரியும் பிற அரசுப் பணியாளர்களைப் போலவே அனைத்து சலுகைகளும் உரிமைகளும் கிடைக்கும். இத்தகைய உரிமைகளைப் பெற்றுவந்த இந்த வகையிலான அரசு ஊழியர்களை இனிமேல் புதிதாகப் பணியில் அமர்த்த முடியாது எனத் தமிழக அரசு 2023ஆம் ஆண்டின் அரசாணை மூலமாக உறுதி செய்திருக்கிறது. அதாவது, தூய்மைப் பணிகளை இனிமேல் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே செய்வதெனக் கொள்கை ரீதியாக முடிவெடுத்திருக்கிறது. இது இத்தொழிலாளர்களுக்கான மிகப் பெரிய அநீதியாகும். உழைப்போர் வாழ்வுக்கு வைத்த வேட்டு.

தமிழகம் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் தூய்மைப் பணியைத் தனியார் கம்பெனிகளுக்குத் தாரைவார்த்து விட்டார்கள். இவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்கள் எனப்படுவர். இந்த ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்திற்கான திட்டம் என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது. இதனால் தூய்மைப் பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. குறைந்த ஊதியமாக மாதம் ரூ.6,000

முதல் ரூ.10,000 வரை மட்டுமே வழங்கப்படுகிறது. இவர்களுக்கு எந்தவிதச் சலுகைகளும் கிடைப்பதில்லை. எண்ணற்ற துயரங்களோடு பணிசெய்கிறார்கள்.

தினக்கூலித் தொழிலாளர்களை மாநகராட்சி அதிகாரிகள் தேவையின் அடிப்படையில் பணிக்கு அழைத்துக் கொள்கிறார்கள். தினந்தோறும் வேலை என்பதற்கு உத்தரவாதமில்லை. மேலும், பாதாளச் சாக்கடை சுத்தப்படுத்துதல், செப்டிக் டாங்க் சுத்தப்படுத்துதல் போன்ற ஆபத்தான பணிகளில் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒருவேளை இத்தகைய ஆபத்தான பணிகளை இவர்கள் செய்யும்போது மரணம் ஏற்பட்டால் இவர்கள் எங்கள் பணியாளர்கள் இல்லை எனக் கை கழுவிவிடும் அவல நிலையே நிலவி வருகிறது. மேற்கண்ட தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் நகரத்தை அடிப் படையாகக் கொண்டு பணியாற்றுபவர்கள். கிராமப்புறத் தூய்மைப்பணியாளர்களின் நிலையோ மிகவும்மோசமானது.



ஒரு பஞ்சாயத்திற்கு இரண்டு அல்லது மூன்று பேர் தற்காலிகமாகக் கிராமப்புற தூய்மைப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பேரூராட்சி என்றால் சற்று அதிகமாக 5 லிருந்து 10 பேர் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கான ஊதியம் என்பது அந்தந்தப் பஞ்சாயத்து அல்லது பேரூராட்சியின் வருவாயைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் பஞ்சாயத்துத்தலைவர் மாறுகையில் தொழிலாளர்களும் மாற்றப்படுவார்கள். பொதுவாகப் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு அடிபணிந்து சென்றால் மாற்றப்பட மாட்டார்கள். இவர்கள் பகுதி நேரப்பணியாளர்கள் என்றாலும் முழு நேரமாகவே வேலை செய்கிறார்கள். இவர்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தைக் கடந்து தனி நபர் களிடம் கையேந்தி நிற்கும் நிலையே இன்றும் நிலவுகிறது. குப்பைகளை அள்ளுவதற்கு உரிய சாதனங்களைக்கூட நிர்வாகம் வழங்குவதில்லை. தொழிலாளர்களே தயார் செய்து கொள்ள வேண்டும் என்பது எழுதப்படாத நியதியாக உள்ளது.

மேற்கண்ட அனைத்து வகைத் தொழிலாளர்களும் உரிய பொது நீதி என்னவென்றால் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் மனிதக் கழிவுகளை அள்ளிக் கொண்டுதான் இருக்கிறார்கள். விலங்குகளின் இறந்த அழுகிப்போன உடல்களையும் இவர்கள் அப்புறப்படுத்துகின்றனர். மேலும், தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் இப்பணியைச் செய்பவர்கள் தலித் மக்களே.

சமீபத்தில் சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளப் பாதிப்பில் சென்னை மாநகரமே சிக்கித் தவித்தபோது தமிழ்நாடு முழுவதிலுமிருந்து தூய்மைப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டுத் தலைநகரைத் தலை நிமிர வைத்தார்கள். இதே போலச் சுனாமியில் பல உயிர்களை வங்கக் கடல் வாரிச்சுருட்டிப் பலி வாங்கியது. இந்நிலையில் இறந்து அழுகிப் போன உடல்களைத் தூய்மைப் பணியாளர்கள் தங்களது வெற்று உடம்பால் தூக்கிச் சுமந்து அப்புறப்படுத்தினார்கள். கொரோனா காலத்தில் நாடு நகரமெல்லாம் ஊரடங்கு உத்தரவில் யாரும் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று கட்டளையிட்ட காலத்திலும் இவர்கள் மட்டும் ஊரெல்லாம் சுத்தம் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இதுபோன்ற பணியாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, வேலைநேர வரையறை, அவர்களுக்கான உரிமைகள் மற்றும் சலுகைகள், மனித மாண்பு குறித்து அவர்களுக்குச் சிந்திக்க நேரமில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் 93 சதவிகிதம் பேர் முறைசாராத் தொழிலாளர்களாகவே உள்ளனர். உரிமையும் சலுகையும் மறுக்கப்பட்டவர்களே முறைசாராத் தொழிலாளர்கள். முறைசாராத் தொழிலாளர்களில் விவசாயத் தொழிலாளர்கள்தான் அதிகம். இவர்களில் 42 சதவிகிதம் பேர் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். இதிலும் குறிப்பாக, முறைசாராத் தொழிலாளர்களின்தொழில் என்பது வேலையின் அடிப்படையில் அல்லாமல் சாதியின் அடிப்படையில் வகுக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதுதான் வேதனையின் உச்சம்.

1990இல் ஏற்பட்ட உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல் போன்ற கொள்கைகள் ஒட்டுமொத்தத் தொழிலாளர்களின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது. உலகத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்த காலம் மாறி உலக முதலாளிகள் ஒன்றிணைந்தனர். அதன் விளைவாக, பல தொழில்நுட்ப நிறுவனங்களில், ஆலைகளில் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கு உரிமை மறுக்கப்படுகிறது. 25 கோடி தொழிற்சாலை விபத்துக்கள் மூலமாக ஆண்டிற்கு 12 லட்சம் பேர் உயிரிழக்கிறார்கள் என்றும், ஆண்டிற்கு 11 கோடித் தொழிலாளர்கள் பணிச்சூழல் காரணமாக நோய்வாய்ப்படுகின்றனர் என்றும், உலகில் 2.7 கோடிப் பேர் இன்றும் அடிமைகளாக வாழ்கின்றனர் என்றும் ஐ.எல்.ஓ. கூறுகின்றது. விளிம்புநிலை மக்களின் விடுதலையே தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான விடுதலையாகப் பார்க்கப்படவேண்டும். மே தினம் வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் உன்னத அடையாளம். உழைப்பே உலகின் முதல் மூலதனம். இந்த மூலதனத்தின் முதலாளி உழைப்பாளிதான். அவர்கள் மாண்புடன் நடத்தப்படவேண்டும். உழைப்போர் வாழ்வு உயரவேண்டும்.